# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை-600 032.
தொலைபேசி: 044-22201337, நிகரி: 044-22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,**
**சென்னை அவர்கள் முன்பாக**

முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

************

முறையீட்டு மனு எண்.0278/2015

ஆணை எண்.002/2016

நாள்: 08/01/2016

மருத்துவர் என்.குணசேகரன்
எண்.2, நேரு தெரு,
ஜெருசேலம் நகர்,
மேற்குத் தாம்பரம்,
சென்னை – 600 045 - முறையீட்டு மனுதாரர்

மாநகராட்சி ஆணையர்,
வேலூர் மாநகராட்சி,
வேலூர் - எதிர் மனுதாரர்

சென்னை, மேற்குத் தாம்பரம், ஜெருசேலம் நகர், நேரு தெரு, குடியிருப்பு எண்.2–ல் வசிக்கும் மருத்துவர் என்.குணசேகரன் அவர்களது முறையீட்டு மனு 29.10.2015 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 278/2015 எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது.

# ஆணை

சென்னை, மேற்குத் தாம்பரம், ஜெருசேலம் நகர், நேரு தெருவில் வசிக்கும் மருத்துவர் என்.குணசேகரன் அவர்கள் தனது மனைவி மருத்துவர் ஆர்.சியாமளா என்பவர் வேலூர் மாநகராட்சியிலிருந்து சென்னை மாநகராட்சிக்கு பணி இட மாறுதல் பெற்று இரண்டு வருடங்களுக்கு மேலாகியும் ஓய்வூதிய பங்களிப்புத் தொகை சென்னை மாநகராட்சிக்கு மாற்றப்படவில்லை என்றும், மேற்படி மருத்துவரிடமிருந்து 2010ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திலிருந்து 2013 ஜீன் வரை ரூ.3,500/- வீதம் மாதா மாதம் கூடுதலாக பிடித்தம் செய்த தொகை திருப்பி அளிக்கப்படவில்லை என்றும் இம்முறைமன்ற நடுவத்திற்கு மனுச் செய்திருந்தார்.

2. மனுதாரரின் முறையீட்டு மனு 29.10.2015 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டது. 04.11.2015 நாளிட்ட இம்முறைமன்ற நடுவக் கடிதத்தில் 10 தினங்களுக்குள் அறிக்கை அனுப்புமபடி வேலூர் மாநகராட்சி ஆணையர் கேட்டுக்கொள்ளப்பட்டார். குறித்த காலகெடுவுக்குள் வேலூர் மாநகராட்சி ஆணையரிடமிருந்து அறிக்கை வரப்பெறாததால் 11.12.2015 அன்று நடைபெற்ற விசாரணையில் கலந்து கொள்ளுமாறு மாநகராட்சி ஆணையருக்கு ஆணையிடப்பட்டது. சிறப்பு மாநகராட்சி கூட்டம் நடைபெறுவதால் விசாரணைக்கு வருவதிலிருந்து விலக்கு அளிக்கவும் உதவி ஆணையர் நேரில் ஆஜராகவும் மாநகராட்சி ஆணையரிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கை ஏற்கப்பட்டது. 11.12.2015 அன்று விசாரணையில் கலந்து கொண்ட வேலூர் மாநகராட்சியின் பொறுப்பு உதவி ஆணையர் திரு.த.வெங்கடேசன் அவர்களால் ஓய்வூதிய பங்களிப்பு திட்டத்தின்கீழ் மருத்துவர் ஆர். சியாமளா அவர்களிடமிருந்து கூடுதலாக பிடித்தம் 12செய்த தொகை ரூ.1,01,634/-க்கான காசோலை விசாரணையின் பொழுது வழங்கப்பட்டது. மேலும் ஓய்வூதிய பங்களிப்பு திட்டத்தின் கீழ் மேற்படி அலுவலரிடமிருந்து பெறப்பட்ட தொகை ரூ.2,23,979/- சென்னை மாநகராட்சிக்கு ஒரு வாரத்தில் அனுப்பி வைக்கப்படும் என விசாரணையின் பொழுது மேற்படி அலுவலர் தெரிவித்திருந்தார். இதனைத் தொடர்ந்து 16.12.2015 நாளிட்ட காசோலை எண்.055470 மூலம் மருத்துவரிடமிருந்து பிடித்தம் செய்த தொகை ரூ.2,23,979/- சென்னை மாநகராட்சிக்கு அனுப்பப்பட்டுவிட்டது எனவும் 17.12.2015 நாளிட்ட கடிதத்தில் வேலூர் மாநகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

3. மேற்படி அலுவலரிடமிருந்து பெறப்பட்ட கூடுதல் தொகைக்கான (ரூ.1,01,634/-) காசோலை மனுதாரர் மூலமாக அவரது மனைவி திருமதி ஆர் சியாமளா என்பவரிடம் வழங்கப்பட்டு ஒப்புகை பெறப்பட்டுவிட்டது. மேலும் மனுதாரரும் ஓராண்டுக்கும் மேலாக வேலூர் மாநகராட்சிக்கு முறையிட்டும் எந்தவிதப் பலனும் ஏற்படாமல், முறைமன்ற நடுவத்தின் நடவடிக்கையால் 45 நாட்களுக்குள் தனது கோரிக்கை நிறைவேற்றப்பட்டதை அறிந்து மனுதாரர் மிகுந்த மன நிறைவு

அடைந்துள்ளதாக வாக்குமூலம் அளித்தார். பணியாளர்களது பணத்தை சம்பந்தப்பட்டவர்களுக்கு வழங்காமல் வைத்திருப்பது கையாடலுக்கு ஒப்பாகும். இச்செயலினை இம்முறைமன்ற நடுவம் கடுமையாக எச்சரிக்கிறது. எதிர்காலத்தில் இதுபோன்ற நேர்வுகளில் காலம் கடத்தாமல் உடனுக்குடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என வேலூர் மாநகராட்சியை இம்முறைமன்ற நடுவம் அறிவுறுத்துகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

//உண்மை நகல் / உத்தரவின்படி / அனுப்பப்படுகிறது//

8/1/14
கண்காணிப்பாளர்

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
சென்னை—600 032

பெறுநர்

1) மருத்துவர் என்.குணசேகரன்
எண்.2, நேரு தெரு,
ஜெருசேலம் நகர்,
மேற்குத் தாம்பரம்,
சென்னை – 600 045

2) மாநகராட்சி ஆணையர்,
வேலூர் மாநகராட்சி,
வேலூர்